| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 29.10.2025 | |
| CC.No. 35/2024 | |
| சாட்சி : PW9 | |
| பெயர் : திரு.குமார் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. முருகன் | தொழில் : மெக்கானிக் |
| கிராமம் : வலசுப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 26/2025 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது நண்பர். சுமார் 4 வருடத்திற்கு முன்பு காரணிப்பட்டி அருகே உள்ள எனது நண்பர் ஆனந்தகுமார் வீட்டின் அருகே நானும், ஆஜர் எதிரியும், ஆனந்த்குமாரும் நின்றுகொண்டிருந்தோம். மாலை 06.00 மணியளவில் எனது நண்பர் ஆனந்த்குமாரை பெட்ரோல் போடுவதற்கு பணம் எடுப்பதற்காக வீட்டிற்கு அனுப்பிவைத்தேன். ஆனந்த்குமார் பணம் எடுத்து வந்தவுடன் நாங்கள் மூவரும் நின்று பேசிக்கொண்டிருந்தோம். எதிர்திசையிலிருந்து வந்த பைக் ஒன்று என் மீது மோதிவிட்டது. எனக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. ஆஜர் எதிரிக்கும், ஆனந்த்குமாருக்கும் சிறு சிறு காயங்கள் ஏற்பட்டது. என் மீது மோதியவருக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னோம். எதிரியோடு நாங்கள் மூவரும் சுகம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தோம்.

**சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. எந்த திசையில் நாங்கள் நின்றுகொண்டிருந்தோம் என்றால் திருச்சி – மதுரை ரோட்டில் வடக்கு பக்கமாக நின்றுகொண்டிருந்தோம். ஆனந்த்குமார் வீடு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 20 மீ தூரத்தில் ஒரு இறக்கத்தில் உள்ளது. சம்பவ இடத்திலிருந்து எனது வீடு சுமார் 2 கி.மீ தூரத்தில் உள்ளது. எதிரியின் வீடு 3 கி.மீ தூரத்தில் உள்ளது. எங்கள் மூவரில் யார் வண்டி ஓட்டி வந்தது என்றால் அஜித்குமார் ஓட்டி வந்தார். சாட்சி பின்பு நின்றுகொண்டிருந்தோம் என்று சொல்கிறார். சம்பவம் நடந்த இடத்திற்கு மேற்கு புறம் பொன்னார்குளம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு வடபுறமும், தென்புறமும் பழனிச்சாமி என்பவரது தரிசு நிலம் உள்ளது என்றால் சரிதான். காயம்பட்டு விபத்தில் இறந்த நபர் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் பாலக்குறிச்சியை சேர்ந்தவர். அஜித்குமார் வைத்திருந்த வண்டியின் பெயர் என்னவென்றால் பஜாஜ் டிஸ்கவர், பதிவு எண் தெரியாது. அந்த வண்டிக்கு ஏதாவது சேதாரம் இருந்ததா என்றால் இல்லை. விபத்தில் இறந்த ஜான் பிரான்சிஸ் என்பவர் ஓட்டி வந்த வாகனம் என்னவென்றால் ஹோண்டா டிரீம். சம்பவம் நடந்தவுடன் ரோட்டில் யாரும் வரவில்லை.

3. கடந்த 28.05.2020 அன்று மாலை 06.45 மணியளவில் விபத்தில் இறந்த ஜான்பிரான்சிஸ் திருச்சியிலிருந்து மாத்திரை வாங்கி கொண்டு தென்வடல் சாலையில் வடக்கிலிருந்து வரும்போது அதே சாலையில் சாலைவிதிகளை கடைப்பிடிக்காமல் எதிர்திசையில் ஆஜர் எதிரி அஜித்குமார் TN 45 8239 என்ற பஜாஜ் டிஸ்கவர் இருசக்கரவாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து எதிரே வந்த ஜான்பிரான்சிஸ் என்பவர் TN 54 D 2230 HERO TWISTTER இருசக்கரவாகனத்தில் வந்தவர் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. அந்த வாகனத்தில் ஆஜர் எதிரி அஜிக்குமாரோடு நானும், எனது நண்பர் ஆனந்த்குமாரும் பயணம் செய்தோம் என்று நேரில் பார்த்த சாட்சிகள் சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. வீட்டிற்கு ஆனந்தகுமார் பணம் எடுக்க வரும் வரை நாங்கள் மூவரும் ஒன்றாகத்தான் வண்டியில் வந்தோம். ஆனந்தகுமார் என்பவரது வீடு சம்பவ இடத்திற்கு அருகே இல்லை என்று சொன்னால் சரியல்ல. அக்கம், பக்கத்தில் வீடுகள் இல்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தானது எதிரியின் அஜாக்கிரதையினாலும், அதிகவேமாகவும் வாகனத்தை ஓட்டி வந்த சாலை விதிகளை சரிவர கடைப்பிடிக்காமல் ஒன்வே ரோட்டில் தெற்கிலிருந்து வடக்குநோக்கி வாகனத்தை ஓட்டி இந்த விபத்தை ஏற்படுத்தியதன் மூலம்

ஜான்பிரான்சிஸ் என்பவர் இறந்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது நண்பர் என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி நாங்கள் நின்றுகொண்டிருந்தோம் என்றும் இறந்த நபர் வாகனத்தை எங்கள் மீது மோதியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.